(6 pages) **Reg. No. :** ..............................

**Code No. : 30197** **Sub. Code : SMTA 31**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

Third Semester

Tamil — Main

இலக்கணம் — யாப்பிலக்கணம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. அசைகளால் ஆனது

(அ) எழுத்து (ஆ) தளை

(இ) சீர் (ஈ) அடி

2. 'கடிநகர்' – என்ன சீர்?

(அ) தேமா (ஆ) புளிமா

(இ) கருவிளம் (ஈ) கூவிளம்

3. தளை எத்தனை வகைப்படும்?

(அ) 4 (ஆ) 5

(இ) 7 (ஈ) 8

4. ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது

(அ) அந்தாதித் தொடை (ஆ) இரட்டைத் தொடை

(இ) செந்தொடை (ஈ) இயைபுத் தொடை

5. வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது

(அ) நேரிசை வெண்பா (ஆ) பஃறொடை வெண்பா

(இ) சிந்தியல் வெண்பா (ஈ) குறள் வெண்பா

6. 'அகவற்பா' எனப்படுவது

(அ) வஞ்சிப்பா (ஆ) வெண்பா

(இ) ஆசிரியப்பா (ஈ) கலிப்பா



Nesamony Memorial Christian College, Marthandam

7. ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவது

(அ) தரவு (ஆ) தாழிசை

(இ) துறை (ஈ) விருத்தம்

8. மூன்றடியாய், ஈற்றடி சிந்தடியாய் வருவது

(அ) குறள் தாழிசை (ஆ) வெண்டாழிசை

(இ) வெண்முறை (ஈ) வெளிவிருத்தம்

9. கலி விருத்தத்தின் அடி அளவு யாது?

(அ) 2 (ஆ) 3

(இ) 4 (ஈ) 5

10. குறளடி நான்கு தனித்து வருவது

(அ) வஞ்சித் துறை (ஆ) வஞ்சி விருத்தம்

(இ) வஞ்சித் தாழிசை (ஈ) வஞ்சிப்பா

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடையளி.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) அசைக்கு உறுப்பாகும் எழுத்தில் அளபெடை பெறும் இடத்தை விவரி.

(அல்லது)

(ஆ) அசை குறித்து எழுதுக.



12. (அ) அடி என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

(அல்லது)

(ஆ) அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை குறித்து எழுதுக.

13. (அ) பாவிற்குரிய அடியும் ஓசையும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் ஓசை யாது? அதன் வகைகளை விவரி.

14. (அ) குறள் வெண்பாவின் இனங்களைச் சான்றுகளுடன் விவரி.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

15. (அ) கலிப்பாவின் உறுப்புக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பாவின் இனங்களைச் சான்றுகளுடன் தருக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்குள் விரிவான விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) சீர் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பெயர் வேறுபாடுகளைத் தருக.

17. (அ) தளை குறித்து விரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தொடை பற்றி விளக்குக.

18. (அ) ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா இவற்றின் ஓசைகளையும் வகைகளையும் சான்றுடன் விவரி.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைகளையும் இனங்களையும் சான்றுடன் விளக்குக.

19. (அ) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி, அதன் இனங்களைச் சான்றுகளுடன் தருக.

(அல்லது)

(ஆ) கலிப்பாவின் பொது இலக்கணம் கூறி, அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.



20. (அ) வஞ்சிப்பா குறித்து விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மருட்பா குறித்துக் கட்டுரை வரைக.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*